


# எல்லைகள் பற்றிப் பேசுவோம்: சுற்றுலாத்துறை, பிரசாவுரிமை மற்றும் கொவிட் – இலங்கையின் பதிற்செயற்பாடு

LAW & SOCIETY TRUST

# ஜனநாயகக் கலந்துரையாடல், முனைப்பான செவிமடுத்தல் மற்றும் உள்ளடங்கலான பிரசைகள் பங்கேற்பு: பெருந்தொற்றின்போதும் சமூக நெருக்கடியின்போதும் உள்ளடங்கலான குடிமைப் பங்கேற்புக்கான தளங்களை உருவாக்கல்

இலங்கை முகங்கொடுக்கும் பெருந்தொற்றின்போதும் சமூக பொருளாதார நெருக்கடியின்போதும் உள்ளடங்கலான குடிமைப் பங்கேற்புக்கான தளங்களை உருவாக்குவதும் ஜனநாயக நிறுவனங்களையும் சட்டத்தின் ஆட்சியையும் அரச பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்துவதும் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். ஈடுபாடுமிக்க பிரசைகள் என்ற ரீதியில், நெருக்கடிக்கான அரசாங்கத்தின் பதிற்செயற்பாடுகள் அரசியலமைப்பியலின் கோட்பாடுகளுக்கு இயைபுறுகின்றது என்பதையும் அரசாங்கம் அதிலிருந்து விலகுமிடத்து அவை கட்டுப்படுத்தப்படுவதையும் தவறான தகவல்களும் வெறுப்பினைப் பரப்பலும் தடுக்கப்பட்டு மாற்றத்தை உருவாக்குவோர் மற்றும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்கள் ஆகியோரின் நேர்மறையான ஈடுபாட்டின் மூலம் சமூக ஒற்றுமை வலுப்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்துவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு, சுகாதார மற்றும் பொருளாதாரச் சவால்களுக்கான அரசாங்கத்தின் துரித பதிற்செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்கின்ற; கொள்கை விடயங்கள் மீதான பகிரங்கக் கலந்துரையாடலொன்றை மேம்படுத்துகின்ற, அடிப்படை உரிமை மீறல்களை ஆவணப்படுத்துகின்ற; ஜனநாயக விழுமியங்களிலும் அரசியலமைப்புக் கோட்பாடுகளிலும் அடிப்படை உரிமைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற உருவாகிவரும் விடயங்கள் பற்றிப் பிரசைகளுக்கு உரிய நேரத்தில் உண்மைகளின் அடிப்படையிலான தகவல்களை வழங்குகின்ற உத்தியோகபூர்வமற்ற ஒரு “குடிமைக் கண்காணிப்பினைக்” கருத்திட்டம் உருவாக்கியுள்ளது. ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் வலுப்படுத்துவதற்காக ஆதரித்துவாதாடல் பிரசாரங்களை மேற்கொள்வதையும் அத்துடன் பெருந்தொற்றுக்குப் பின்னரான சூழமைவில் பிரசைகள் தங்களின் தேவைகள், பதகளிப்புக்கள் மற்றும் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதை இயலச் செய்யும் ஒரு தேவைகள் மதிப்பீட்டினை நடத்துவதையும் கருத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

கருத்திட்டத்துக்கான ஒரு பங்களிப்பாக அக்சல் மற்றும் பஸ்கல் பெல் வினால் இந்த அறிக்கை எழுதப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தில் அவர்களின் ஈடுபாட்டினை சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (LST) மெச்சுகின்றது. இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் எல்எஸ்டி சபையினதோ அல்லது முகாமைத்துவத்தினதோ கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை.

## முகப்பு கலை: சங்கீத் மதுரவல

# எல்லைகள் பற்றிப் பேசுவோம்: சுற்றுலாத்துறை, பிரசாவுரிமை மற்றும் கொவிட் – இலங்கையின் பதிற்செயற்பாடு

## அறிமுகம்

முன்பு ஒருபோதுமே நிகழ்ந்திராததான அழிவினை ஏற்படுத்தும் வகையில் கடினமான தீர்மானங்களுக்கு முகங்கொடுப்பதற்கு கொவிட்–19 சமூகங்களுக்கு நெருக்கடியினை ஏற்படுத்திவருகின்றது. பிரசைகளின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கிடையிலான முன்னுரிமையில் உள்ள முரண்பாடு ஒருபுறமும் சுகாதாரத்தினையும் பாதுகாப்பினையும் நிலைபேறானதாக்கும் பொருளாதார முறைமையினைப் பாதுகாப்பது மறுபுறமும் இந்த நெருக்கடிகளுள் துலாம்பரமானவையாக உள்ளன. உலகம் முழுவதும் சுகாதார நலன்களுக்கும் பொருளாதார நலன்களுக்கும் இடையிலான பதற்றத்தின் பிரதான பரப்பாகச் சர்வதேசப் பயணத்துறை அமைந்திருந்தது. இலங்கையில் மூன்று மில்லியன் மக்கள் சுற்றுலாத்துறையினைச் சார்ந்து வாழ்கின்றனர். இலங்கைப் பொருளதாரத்திற்கு வெளிநாட்டு வருமானத்தினைக் கொண்டுவரும் பிரதான மூலமாகவும் சுற்றுலாத்துறை இருந்து வருகின்றது.

பெருந்தொற்று மக்களினால் பரப்பப்படும் தன்மையினைக் கொண்டிருந்த காரணத்தினால், நாட்டிற்குள் சர்வதேசப் பயணிகள் வருவது நிறுத்தப்படவேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டது. இருப்பினும், பயணிகளின் வருகையினைத் தடுப்பதற்கான சுகாதார அடிப்படையிலான இந்தத் தேவையினைப் பொருளாதாரத் தாக்கத்தினால் தற்போது நிலைகுலைந்துள்ள பல்வேறு குழுக்களின் தேவைகளுக்கு எதிராகச் சமப்படுத்த வேண்டியிருந்தது. எல்லைகள் அனைத்தும் மூடப்பட்டுவிடுமா, அவ்வாறு மொத்தமாக மூடப்படாவிட்டால் பயணிகளின் வருகையினைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எந்த அளவுக்குச் செல்லும் என்பதே பெரும்பான்மையான இலங்கையர்களின் மனதில் இயல்பாக எழுந்த முதல் கேள்வியாக இருந்தது. சுற்றுலாத்துறையின் மீதான தாக்கமே ஆரம்பத்தில் பிரதான கரிசனையாக இருந்தது. ஆனால் இறுதியில் தொற்றுத்தடைகாப்பு மற்றும் கொவிட் சிகிச்சை ஆகியவற்றுக்கான உள்நாட்டு ஆற்றலும் இதில் ஒரு பங்கு வகித்தது. முழுவதுமாக மூடாமலும் வரையறுக்கப்பட்ட தொற்றுத்தடைகாப்பு வளங்களுடனும், கொவிட்

தொற்று உள்ளதா என்பதை அறிவதற்காக வருகை தரும் பயணிகளைப் பரிசோதிப்பதற்கான செயன்முறைகள், வைரஸ் தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதில் இன்றியமையாததாகக் காணப்பட்டது. அதேவேளை, அரசாங்கத் தலைவர்கள் முழு முடக்கத்தினைப் பரிசீலித்தவாறும் இலங்கையர்கள் வெளிநாடுகளில் இருந்து பெருமளவில் திரும்புவதை ஊக்குவிக்காமல் இருக்கும் நோக்கத்துடன் பகட்டாரவாரப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டும் இருந்தபோது, வெளிநாடுகளில் உள்ள பல்வேறு பிரசைகள் நாட்டிற்கு வரத் தொடங்கியதுடன் ஏனைய பலர் வெளிநாடுகளில் சிக்குண்ட நிலையில் தாய்நாட்டின் உதவியினைக் கோரியதைக் காணக்கூடியதாக இருந்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கையில், சுற்றுலா சார்ந்த தொழிற்துறைகளில் ஈடுபட்டிருந்த இலங்கையர்கள் எல்லைகள் மீதான தடையினை ஓரளவுக்கேனும் தளர்த்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் பிரயோகித்து வந்தனர். கொவிட் பெருந்தொற்றின் முதல் வருடத்தினை இலங்கை கடந்து வரும்போது, இவ்வாறான முரண்படும் அக்கறைகளின் சிக்கற்தன்மை எல்லைக் கொள்கை என்னும் விடயத்தின் ஓர் அம்சமாகக் காணப்பட்டது. எல்லைக் கொள்கையில் அரசாங்கம் எவ்வாறு இந்தச் சிக்கல்களைக் கையாண்டது என்பது அரசாங்கத்தின் (பரிணாமமடைந்து வரும்) கொவிட்-19 உபாயமார்க்கத்தின் ஒட்டுமொத்தப் பிரதிபலனுக்கும் கணிசமான பங்களிப்பினை வழங்கியிருந்தது.

2020 ஆம் ஆண்டில் எல்லைக் கட்டுப்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்ட பல்வேறு அணுகுமுறைகளை இந்தக் கலந்துரையாடல் பத்திரம் உன்னிப்பாக ஆராய்கின்றது. பயணிகள் வருகையின் போது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள் பற்றியும் நாட்டினுள் வருகின்ற பயணிகளுக்குத் தொற்றுள்ளதா என்பதை அறிவதற்காக அவர்களைப் பரிசோதித்துத் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்தியமை பற்றியும் திருப்பியனுப்புதல் தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடி, 2020 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் எல்லைகளை மீளத் திறப்பதற்கான இலங்கையின் நகர்வினை ஆராய்ந்து, இறுதியில் பெருந்தொற்றின் ஒட்டுமொத்தக் கையாளுகை பற்றிய ஆய்வுடன் ஆவணம் முற்றுப்பெறும்.

## வருகைகளைக் கட்டுப்படுத்தல்

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே சீனாவில் தொற்றுநோய் ஒன்று உருவாகியுள்ளமை பற்றி எச்சரிக்கையாக இருந்த பொதுமக்கள் இலங்கையர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் அப்போது மேற்கொண்டுவந்த நடவடிக்கைகள் பற்றி மிகுந்த ஆர்வத்தினை வெளிப்படுத்தினர். அச்சந்தர்ப்பத்தில் இலங்கையின்

சுற்றுலாத்துறையின் மூன்று முன்னணி மூலங்களில் ஒன்றாகச் சீனா காணப்பட்டது. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் (SLTDA) தரவுகளின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டில், - மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் 9 சதவிகிதமான - 167,863 சீன சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் விடுமுறையினைக் கழித்துள்ளனர். 2010ஆம் ஆண்டு ஜனவரியில் மாத்திரம் இலங்கைக்கு 22,363 சீனச் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது வருகை தந்த மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் 10 சதவிகிதமாகும்.[1]

எவ்வாறாயினும், இந்த ஆரம்பக் கட்டங்களில் எல்லையினை முழுவதுமாக மூடுவது கருத்தில் கொள்ளப்படவில்லை. அமுல்படுத்தப்பட்டு வரும் நடவடிக்கைகள் பற்றிச் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாரச்சி ஜனவரி 25 ஆம் திகதி பொதுமக்களுக்கு அறிவித்தார். அமைச்சரின் கூற்றின் பிரகாரம், "வருகை தரும் (பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்) சகல பயணிகளுக்கும் அவர்கள் தரையிறங்குவதற்கு முன்னர் சுகாதாரக் கருமபீடம் பற்றி அறிவிக்கப்படுகின்றது. தொற்றுக்கான நோய்க்குறிகள் அவதானிக்கப்பட்டால் கருமபீடத்திலுள்ள மருத்துவ அணியிடம் இருந்து பயணிகள் உதவியினைப் பெற்றுக்கொள்ள முடியும். எவ்வாறாயினும், டேர்மினல் வழியே பயணிகள் நடந்து செல்லும்போது அவர்களின் உடல் வெப்பநிலை தன்னியக்கமாகக் கண்டறியப்படும். சீனாவில் இருந்து வருகைதரும் சகல பயணிகளும் உன்னிப்பாகப் பரிசீலிக்கப்படுவர்."[2]

விரைவில் இலங்கையிலும் முதலாவது கொவிட் - 19 நோய்த்தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்டார். 43 வயதான சீனப் பெண் ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.[3] பதில் நடவடிக்கையாக, விசா கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி சீனப் பயணிகளின் வருகைக்கு எதிராக அரசாங்கம் எல்லையினை இறுக்கமாக்கியது. அமைச்சர் வன்னியாரச்சி பின்வருமாறு கூறியிருந்தார், "இலங்கைக்கு விஜயம் செய்யும் சீனப் பயணிகளுக்கு அரசாங்கம் நேற்று (ஜனவரி 28) கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.... ஒன்லைன் மூலம் விசாவுக்கு விண்ணப்பிக்கும் சீனப் பிரசைகள், வருகை தருகையில் தானாகவே விசா பெற்றுக்கொள்வதற்கு இனிமேல் உரித்துடையவர்கள் அல்ல. மாறாக, ஒன்லைனில் சமர்ப்பிக்கப்படும் அவர்களின் விசா விண்ணப்பங்கள் அவர்கள் சீனாவின் எப்பகுதியில் இருந்து வருகின்றனர் என்பதை அறிவதற்காகப் பரிசீலிக்கப்படும் என்பதுடன் உயர் அபாயநேர்வுடைய இடங்களில் இருந்து வருபவர்களுக்கு நாட்டினுள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது."[4]

மேலும், இவ்வாறான சீனப் பயணிகளின் வருகை தொடர்பாகக் கண்காணிப்புக் கொள்கை ஒன்றினையும் அரசாங்கம்

கைக்கொண்டது. வன்னியாரச்சி குறிப்பிட்டதைப் போல், “பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு வருகை தரும் சகல சீனப் பயணிகளுக்கும் சீன மொழியில் அச்சடிக்கப்பட்ட படிவம் ஒன்று வழங்கப்படும். இலங்கையில் அவர்கள் தங்கவுள்ள இடங்கள் பற்றிய தகவல்களை அப்படிவத்தில் அவர்கள் பிரகடனப்படுத்த வேண்டும். அவர்கள் இங்கே தங்கியுள்ள நாட்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அந்தந்த இடங்களில் அவர்களைக் கண்காணிப்பார்கள்.”[5]

வருகை தருபவர்களுக்குத் தொற்றுள்ளதா என்பதை அறிவதற்காக அவர்களைப் பரிசோதிப்பதற்கு ஒரு விசேட புறஎல்லைப் பரப்பு நிர்மாணிக்கப்பட்டு வருவதாக விமானநிலைய மற்றும் விமான சேவைகள் அதிகாரசபையின் தலைவரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி ஜனவரி 29 ஆம் திகதி குறிப்பிட்டார். “இந்தப் புறஎல்லைப் பரப்பினுள் பயணிகள் தவிர்ந்த எவரும் நுழைவதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம். வருபவர்களை நாம் பரிபூரண பரிசோதனைக்கு உட்படுத்துகின்றோம்... சகல அதிகாரிகளும் இவர்களைக் கண்காணித்து வருவதால் அச்சப்படுவதற்கான காரணம் எதுவும் இல்லை. கொரொனா வைரஸ் கட்டுப்படுத்தப்படும் வரை நாம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடர்வோம்.”[6]

மார்ச் மாத ஆரம்பத்தில் அரசாங்கம் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது போல் தென்பட்டது. மார்ச் 6 ஆம் திகதி ஜெனரல் சந்திரசிறி பின்வருமாறு குறிப்பிட்டார்: “கட்டுநாயக்கவிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் இன்று முதல் பயணிகளுக்காகத் திறக்கப்படும்.... விமானநிலைய வளாகத்தினுள் கூடும் மக்களை எவ்வளவு சிறப்பாக முகாமை செய்ய முடியும் என்பது தொடர்பாக முகாமைத்துவத்தினால் நடத்தப்பட்ட ஆய்வினைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.”[7] எவ்வாறாயினும், ஒரு வாரமே கழிந்த நிலையில், மார்ச் 12 ஆம் திகதி, கொவிட் தொற்றுக்காளான முதல் இலங்கையர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். சுற்றுலாப் பயணிகளுக்கான வழிகாட்டி ஒருவரும் அவரின் சகபாடியும் தொற்றுக்காளாகியிருந்தமை கண்டறியப்பட்டது. கொவிட் தொற்றுத் தொடர்பாக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த கண்ணோட்டத்தில் இது உடனடியாக ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தியது. மார்ச் 13 ஆம் திகதி, “வீட்டில் இருந்து பணியாற்றுதல்” எனக் கூறப்பட்ட ஒரு பொதுமுடக்க நிலைக்குள் நாடு நுழைந்தபோது, தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட கூட்டம் ஒன்றில் தோன்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பின்வருமாறு கூறினார்: “வெளிநாட்டில் இருந்து ஏனையவர்கள் வருவதைத் தடுப்பதே பிரதான நடவடிக்கையாக இருக்கவேண்டும்.”[8] “எவ்வாறாயினும், சீனா அபாயநேர்வு குறைந்த ஒரு நாடு என்பது அரசாங்கம் மேற்கொண்ட அபாயநேர்வு மதிப்பீட்டுச் செயன்முறையில் இருந்து தற்போது

தெரியவந்துள்ளதால் சீனப் பயணிகளின் வருகை மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது" எனவும் அதே கூட்டத்தில் கூறப்பட்டது."[9] "ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருபவர்களுக்கு விசா வழங்குவதை இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்துமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்...." என அடுத்த நாள் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்தது"[10] அத்துடன் பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின், சுவீடன், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து மற்றும் ஆஸ்திரியா ஆகிய நாடுகளில் இருந்து பயணிகள் வருவதற்கும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தடை விதித்தது."[11].

புரியாத புதிராக அமைந்த பொதுமுடக்கத்தின் முதல் வாரம் கடந்ததும் எல்லையினை மூடியமை தொடர்பான கேள்விகள் வலுப்பெறத் தொடங்கியது. விமானநிலையத்தினை மூடுமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதியிடம் உண்மையில் மார்ச் 17 ஆம் திகதி பரிந்துரைத்திருந்தது.[12] மறுபுறத்தில் விமானநிலையங்கள் மற்றும் சிவில் விமானப்போக்குவரத்துச் சேவைகள் தலைவரான மேஜர் ஜெனரல் சந்திரசிறி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார், "விமானநிலையத்தின் இயக்கத்தினை நிறுத்துவதற்கான தேவை தற்போது இல்லை. விமானநிலைய வளாகத்தினுள் கொவிட்-19 தொற்றினைக் கட்டுப்படுத்த நாம் அதிசிறந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். மேலும் இதுவரையில் எம்மால் அதனை மிகச் சிறப்பாக முகாமை செய்யக்கூடியதாக இருந்திருக்கின்றது."[13]

எவ்வாறாயினும், அடுத்த நாள், விமானநிலையம் உடனடியாக மூடப்படும் என ஜனாதிபதி ராஜபக்ச அறிவித்தார். இந்த விடயம் தொடர்பில் மேலதிக கலந்துரையாடல் எதற்கும் இடமில்லை என்பதில் அவர் பிடிவாதமாக இருந்ததைத் தொலைக்காட்சியில் காட்டப்பட்ட கூட்டத்தில் காணக்கூடியதாக இருந்தது.[14] நாட்டுக்குத் திரும்பி வந்து தடுப்புப் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்படாது சென்றவர்களாலும் அவர்களுடன் தொடர்புகொண்டிருந்தவர்களாலுமே தொற்றுப் பரவுகின்றது என்றும் அவர்களைக் கண்டுபிடித்து அவர்களைத் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்துவதே முன்னுரிமையாக இருக்கவேண்டும் என்றும் அவர் விளக்கினார். இலங்கைக்குத் திரும்ப விரும்பும் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் பற்றி வினவியபோது, வருபவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தால் செயன்முறை திக்குமுக்காடிப் போகும் என்பதை ஜனாதிபதி வலியுறுத்தினார். எனவே, 15 நாடுகளை (மிகப் பெரும்பான்மையாக ஐரோப்பிய நாடுகள்) உள்ளடக்கும் வகையில் பயணக் கட்டுப்பாடுகள் நீட்டிக்கப்பட்டன.[15] இலங்கைக்கு வருவதற்காக விசா வழங்கப்பட்டு இன்னும் வருகை தராமல் இருக்கும் சகல வெளிநாட்டவர்களினதும் சகல வகையான இலத்திரனியல் விசாக்களையும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் ஒரு வாரத்தினுள் இடைநிறுத்தியது.[16] இரண்டு நாட்களின் பின்னர், "கொவிட்–19 வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்படும் வரையில் எங்கே

இருக்கின்றனரோ அங்கேயே பாதுகாப்பாக இருக்குமாறு" வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் ஓர் அறிக்கை ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்டது."[17] மேலும், அந்த அறிக்கை பின்வருமாறு குறிப்பிட்டது, "நாட்டுக்குத் திரும்புவதற்காக வெளிநாட்டில் வசிக்கும் இலங்கை மாணவர்களும் வியாபாரிகளும் தொழிலாளர்களும் விடுத்த வேண்டுகோள் நாட்டில் நோயைக் கட்டுப்படுத்திய பின்னர் பரிசீலிக்கப்படும்."[18] மார்ச் 31 நள்ளிரவு வரை அமுலில் வைத்திருக்கத் திட்டமிடப்பட்டிருந்த விசா இடைநிறுத்தம் பின்பு ஏப்ரல் 7 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டது.[19] அதே வாரம், சகல வெளிநாட்டவர்களுக்கும் புதிய விசாக்களை விநியோகிப்பதும் குடிவரவுத் திணைக்களத்தினால் இடைநிறுத்தப்பட்டது.[20]

## வருகை தருபவர்களுக்குத் தொற்று உள்ளதா என்பதைப் பரிசீலித்தலும் தொற்றுத்தடைகாப்பும்

குறிப்பாக, எல்லை முழுவதுமாக மூடப்படும் வரையில், வருகை தருபவர்கள் நாட்டினுள் வைரசினைப் பரப்புவதைத் தடுப்பது முக்கியமானதாக இருந்தது. எவ்வாறாயினும், பின்னோக்கிப் பார்க்கையில், வருகை தருபவர்களுக்கு கொவிட் தொற்றுள்ளதா என்பதைக் கண்டறிவதற்கு அரசாங்கம் கைக்கொண்ட கொள்கைகள் சிலருக்கு ஆச்சரியத்தினை ஏற்படுத்துபவையாக இருக்கலாம்.

ஆரம்பத்தில், ஜனவரி மாதத்தில், தொற்றுள்ளதா என்பதைப் பரிசீலிக்கும் செயன்முறை மிகவும் கண்டிப்பற்றதாகக் காணப்பட்டது. விமானநிலையத்தில் சுகாதாரக் கருமபீடம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. தொற்றுக்கான அறிகுறி தங்களில் காணப்படுவதைப் பயணிகள் அவதானித்தால் அவர்கள் கருமபீடத்தில் உதவியினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது விமானத்தில் இருந்து தரையிறங்குவதற்கு முன்பே பயணிகளுக்கு அறிவிக்கப்பட்டது. அதேவேளை, பயணிகள் டேர்மினலில் நடந்து செல்லும்போது அவர்களின் உடல் வெப்பநிலை தன்னியக்கமாகக் கண்டறியப்பட்டது. மேலும் சீனாவில் இருந்து வருகை தரும் பயணிகள் உன்னிப்பாகப் 'பரிசோதிக்கப்பட்டனர்'.[21] சீனாவில் இருந்து இலங்கை மாணவர்கள் வரத்தொடங்கியதும் அவர்களிடம் "கிரமமான மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுமாறும் அவர்களின் உடல் வெப்பநிலை தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறும் மட்டுமே வேண்டப்பட்டது. அவர்களிடம் குறைந்தது 20 நாட்களுக்காவது முகக்கவசங்களை அணியுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது."[22] எவ்வாறாயினும், சிறிலங்கன் விமான சேவையினைப் பயன்படுத்தி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மிகவும் பெருமிதமாகப் பேசப்பட்ட 'மீட்புப் பணி' மூலம் வுஹானில் கல்விகற்று வந்த 33 மாணவர்களை நாட்டுக்குக்

கொண்டுவந்தபோது, அவர்களைத் தியத்தலாவ இராணுவ முகாமில் தொற்றுத் தடைகாப்புக்கு உட்படுத்த அரசாங்கம் குறிப்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டது.[23] எனவே, ஜனவரி மாதத்திலேயே வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுப்பதில் தொற்றுத்தடைகாப்பின் முக்கியத்துவம் குறித்து அரசாங்கம் அறிந்திருந்தது. ஆனால், குறைந்தது சீனாவில் இருந்து வருபவர்களுக்கேனும் இத்தடைகாப்பினை அமுல்படுத்த அரசாங்கம் நாடவில்லை. மேலும், நோய்க்குறிகளற்ற தொற்றுடையோர் இருப்பதற்கான சாத்தியம் பற்றி அரசாங்கம் அறிந்திருக்கவில்லை போலும். ஏனெனில் அவ்வாறானவர்களைப் பரிசோதித்துத் தொற்றினைக் கண்டுபிடிக்க எவ்விதமான நடவடிக்கைகளும் அமுலில் இருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் பிசிஆர் பரிசோதனைகள் மூலம் வருகை தருவோரை தொற்றுக்காகப் பரிசோதிப்பதை இலங்கை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கவில்லை.[24]

வருகை தருவோரைத் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்துவதைப் பொறுத்த அளவிலும் அரசாங்கம் அவதானமாக இருக்கத் தவறியுள்ள நிலையே தென்படுகின்றது. மார்ச் மாதம் 1 ஆம் திகதிக்கும் 9 ஆம் திகதிக்கும் இடையில் மொத்தமாக 8,507 இலங்கையர்கள் நாட்டுக்குத் திரும்பியுள்ளனர்; அவர்களை நேரடியாகத் தொற்றுத்தடைகாப்புக்கு அனுப்புவதற்கு பதிலாக, அவ்வாறு திரும்பியோர் உள்ளூர்ப் பொலிசிலும் சுகாதார அதிகாரிகளிடமும் பதிவுசெய்து “சுய தொற்றுத்தடைகாப்புக்கு” உட்படவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டனர்.[25]

ஆரம்பத்தில் தொற்றுத்தடைகாப்புப் பற்றி மக்கள் அச்சம் கொண்டிருந்தனர். வெளிநாட்டில் இருந்து எத்தனை பேர் திரும்பி வந்துள்ளனர் என்பதைப் பற்றி அரசாங்கம் அறிந்திருந்தது. உள்ளூரில் பதிவுசெய்தவர்களின் எண்ணிக்கை திரும்பிவந்தவர்களின் மொத்த எண்ணிக்கையுடன் பொருந்தவில்லை. தொற்றுத்தடைகாப்பின் முக்கியத்துவம் பற்றிப் பல்வேறு அரசாங்க அதிகாரிகள் ஊடகங்களில் வலியுறுத்திவந்தனர். தமது நோய்க்குறிகள் பற்றி அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தாத வெளிநாட்டில் இருந்து வருகை தந்த ஒருவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தான் உத்தரவிட்டுள்ளதாகக் கூட ஜனாதிபதி ராஜபக்ச குறிப்பிட்டார்.[26] இதேபோன்று, தமது அயல்பகுதிகளில் தொற்றுத்தடைகாப்பு நிலையங்களை அமைப்பதற்கு உள்ளூர்ச் சமுதாயங்கள் எதிர்ப்புத் தெரிவித்தன. ஹெந்தளையில் உள்ள தொழுநோய் வைத்தியசாலையினைத் தொற்றுத்தடைகாப்பு நிலையமாக மார்ச் மாத ஆரம்பத்தில் அறிவித்தபோது வைத்தியசாலையினை அண்டிய பகுதியில் வாழும் மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தமையினை இதற்கான முதல் உதாரணமாகப் பார்க்க முடியும். இந்தப் பிணக்கினைத் தீர்ப்பதற்கு அரசியல் தலையீடுகள் தேவைப்பட்டன.[27]

எதிர்பார்த்தவாறு சமச்சீராகச் சுய தொற்றுத்தடைகாப்பு இடம்பெறாத காரணத்தினால், தென்கொரியாவில் இருந்தும் இத்தாலியில் இருந்தும் ஈரானில் இருந்தும் வருகை தருபவர்களுக்கு தொற்றுத்தடைகாப்பு கட்டாயமாக்கப்படும் என அரசாங்கம் மார்ச் 10 ஆம் திகதி அறிவித்த அதேவேளை ஏனைய நாடுகளில் இருந்து திரும்பிய பயணிகளிடமும் 14 நாட்கள் சுயதொற்றுத்தடைகாப்புக்கு உட்படுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.[28] இதனால், குறிப்பிட்ட நாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் விமானநிலையத்தில் இருந்து கந்தக்காடு, புனானி மற்றும் தியத்தலாவ ஆகிய இடங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்களில் அமைக்கப்பட்ட மூன்று தொற்றுத்தடைகாப்பு நிலையங்களுக்கு இராணுவத்தினால் கூட்டிச் செல்லப்பட்டனர். இதேவேளை, அதிகமான நிலையங்களை உருவாக்குவதற்கும் இராணுவம் தயாராகி வந்தது.

அடுத்த நாளே தொற்றுத்தடைகாப்பு நிலையங்கள் பற்றிய விமர்சனங்கள் சமூக ஊடகங்களில் வெளிவரத் தொடங்கின. ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி விமர்சனங்களை நிராகரித்து இணையத்தில் போலிச் செய்திகள் வெளியிடப்படக்கூடாது என்று கேட்டுக்கொண்டார். அவர் பின்வருமாறு குறிப்பிட்டார், “வெளிநாட்டில் இருந்து வருகை தருபவர்கள் சூழ்நிலையுடன் தொடர்புபட்டுள்ள அபாயநேர்வுகள் பற்றி அறியாமல் இருக்கலாம் அல்லது அது சுயநலமாக இருக்கலாம். ஆனால், இந்த நாட்டின் சுகாதார அமைச்சர் என்ற ரீதியில் எனக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது, குறிப்பாக இந்த நாட்டு மக்களைப் பாதுகாத்து நோய் பரவுவதைத் தடுப்பதற்கான பொறுப்பு எனக்கு இருக்கின்றது.”[29]

நோய்ப் பரவலைத் தடுப்பது பற்றிய சுகாதார அமைச்சரின் இந்த தீவிர வலியுறுத்தலைத் தாண்டி, தென்கொரியாவில் இருந்தும் இத்தாலியில் இருந்தும் ஈரானில் இருந்தும் வருபவர்களை மட்டுமே இலங்கை தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்தியது. உண்மையில், அதிசயிக்கத்தக்க வகையில், சீனாவில் இருந்து வருகை தந்தவர்களை இந்தக் கட்டத்தில் தொற்றுத்தடைகாப்பு நிலையங்களில் காண முடியவில்லை. இந்தத் தீர்மானம் பற்றிக் வினாவியபோது, அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்ட அபாயநேர்வு மதிப்பீட்டுச் செயன்முறையில் சீனா குறைந்த அபாயநேர்வுடைய நாடாகக் கண்டறியப்பட்டுள்ளதாக வைத்தியர் அனில் ஜாசிங்க குறிப்பிட்டார்.[30] அடுத்த நாள், ஐரோப்பாவில் இருந்து வருகை தருபவர்கள் அனைவரும் கட்டாயமாகத் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படவேண்டும் எனப் பிரகடனப்படுத்தப்பட்டது.[31]

“உயர் அபாயநேர்வுடைய” நாடுகளில் இருந்து திரும்பிவருபவர்கள் கட்டாயமான தொற்றுத்தடைகாப்புக்கு உட்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட போதிலும் அதனைத் தவிர்த்துக்கொள்வதில்

சிலர் வெற்றிகண்டனர். நாட்டிற்குத் திரும்பிவந்துள்ள அவ்வாறானவர்களைக் கண்டுபிடித்து அவர்களைத் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்துமாறு பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் கிராமசேவகர்களுக்கும் ஜனாதிபதி ராஜபக்ச மார்ச் 18 ஆம் திகதி உத்தரவிட்டார்.[32] விமானநிலையத்தில் இருந்து தொற்றுத்தடைகாப்பு நிலையங்களுக்கு, குறைந்தது ஆரம்பக் கட்டங்களில், இராணுவத்தினால் போக்குவரத்து வழங்கப்பட்டமையினையும் தாண்டியே சிலர் தொற்றுத்தடைகாப்பினைத் தவிர்த்திருக்கின்றனர் என்பது சுவாரஸ்யமானதாகும். மேலும், தொற்றுத்தடைகாப்பினைத் தவிர்ப்பவர்களுக்கு அதிருப்தியேற்படுத்தும் வகையிலும் அவர்களைப் பலவந்தப்படுத்தியும் நிர்வாகம் பதிற்செயற்பாடாற்றிய அதேவேளை, தொற்றுத்தடைகாப்பு பாதுகாப்பானது மற்றும் நன்மையளிப்பது எனத் திரும்பிவருபவர்களின் மத்தியில் நம்பிக்கையினையும் விசுவாசத்தினையும் உருவாக்குவதற்கு நிர்வாகம் தவறிவிட்டதாகவே தென்படுகின்றது. ஏப்ரல் மாதமாகியும் கூட இந்தியா, இந்தோனேசியா மற்றும் துபாய் போன்ற நாடுகளில் இருந்து திரும்பி வந்து உரிய முறையில் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படாதவர்களின் மத்தியில் இருந்து தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.[33] விரைவில், இன்னும் அதிகமானவர்கள் கூட நாட்டுக்குத் திரும்பி வரலாம். உரிய முறையில் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படத் தவறுபவர்களினால் தொற்றுப் பரப்பப்படுவது தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுவதற்கான ஒரு முக்கியமான காரணியாக இருக்க முடியும்.[34]

## தாயகத்திற்குத் திருப்பி அனுப்புதல்

இதுவரையிலான கலந்துரையாடல்களில் இருந்து வெளிப்படுவதைப் போன்று, எல்லைக் கொள்கை எனும் சூழமைவில் இருந்து எழுகின்ற ஒரு பிரதான விடயமாகத் தாயகத்திற்குத் திருப்பி அனுப்புதல் காணப்படுகின்றது. உலகம் முழுவதும் பெருந்தொற்றுப் பரவ ஆரம்பித்ததும், வெளிநாடுகளில் வாழ்ந்த இலங்கையர்கள் அலையலையாகத் திரும்பி வர ஆரம்பித்தனர். வெளிநாடுகளில் ஏற்பட்ட தொழில் இழப்பு இதற்கான பிரதான காரணமாக அமைந்திருந்த போதும் இவர்கள் வெளியேறிவந்த நாடுகளில் பெருந்தொற்றுத் தீவிரமடைந்தமையும் இவர்களின் திரும்பலை ஊக்குவித்தது எனலாம். உள்நாட்டு இலங்கையர்களைப் பொறுத்த அளவில், சுகாதார முறைமையின் கொள்திறன் என்னும் விடயத்தில் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படல் ஒரு சவாலாக மாறியது. குறிப்பாக, தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும் அதிகமானவர்களைத் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்த நேரிட்டமையும் இதற்கான காரணமாக அமைந்தது.

எவ்வாறாயினும், பெப்ரவரி மாதத்தில், நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படலின் ஆரம்பக் கட்டத்தில், அரசாங்கம் அதிக ஆர்வத்தினைக் காட்டியது. சீனாவின் ஏனைய பிராந்தியங்களைச் சேர்ந்த மாணவர்கள் தாமாகவே திரும்பிவந்து கொண்டிருந்த அதேவேளை, பெருந்தொற்று மிக மோசமாகப் பரவிக்கொண்டிருந்த வுஹானில் இருந்து இலங்கை மாணவர்களை அழைத்துவரும் 'கருணைப் பணியினை' இலங்கை மேற்கொண்டது.[35] ஆனால், விரைவில், திரும்பிவருபவர்களை வரவேண்டாம் என அரசாங்கம் அதைரியப்படுத்த ஆரம்பித்தது. தொற்றுத்தடைகாப்பு வசதிகளைக் காரணம் காட்டி, மார்ச் மாத நடுப்பகுதியில் வருகைகளுக்கு முழுமையான தடை விதிக்கப்படவேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.[36] மார்ச் மாத முடிவில், விமானநிலையத்தில் அனைத்து வருகைகளும் இடைநிறுத்தப்பட்டதுடன் வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களை அவர்கள் இருக்குமிடங்களிலேயே இருக்குமாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு ஆலோசனை வழங்கியது.[37] எவ்வாறாயினும், அதேவேளை, வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் சிலர் தாய்நாட்டிற்கு அனுப்பப்பட்ட சில விசேட சம்பவங்கள் நடைபெற்றதையும் காணக்கூடியதாக இருந்தது. உதாரணமாக, இந்தியாவில்[38] சுற்றுலா மேற்கொண்டிருந்த 48 பௌத்த யாத்திரிகர்கள் திரும்பி வருவதற்கு வெளிநாட்டமைச்சு வசதி வழங்கியதுடன் இந்தியா[39] நேபாளம்[40] போன்ற குறிப்பிட்ட பல நாடுகளில் இருந்து இலங்கை மாணவர்கள் திரும்பி வருவதற்கும் அமைச்சு வசதி வழங்கியது. ஏனைய நாடுகளில் உள்ள மாணவர்களும் திரும்ப வருவதற்கு வேண்டுகோள் விடுத்தனர். பெலாரசில் இருந்த அவ்வாறான 850 மாணவர்களும் பங்களாதேசில் இருந்த மாணவர்களும் தாங்கள் திரும்புவதற்கு வசதி செய்யுமாறு ஜனாதிபதியை எழுத்து மூலம் கோரினர்.[41] உண்மையில், அவர்கள் திரும்பி வருவதை அதைரியப்படுத்துவதன் மத்தியிலும், தாயகம் திரும்புவதற்காக அரசாங்கத்தின் உதவியினைப் பெறுவதற்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்காக அரசாங்கம் 'இலங்கையைத் தொடர்புகொள்ளுங்கள்' எனும் ஓர் ஒன்லைன் தளத்தினை ஆரம்பித்தது. நாடு திரும்புவதற்காக 42,522 உறுப்பினர்கள் மே மாத முடிவில் இத்தளத்தில் பதிவுசெய்திருந்தனர்.

பங்களாதேசில் உள்ள இலங்கையர்கள் விடுத்த வேண்டுகோளில், அவர்கள் "விமானப் பயணத்திற்கான செலவினையும் தொற்றுத்தடைகாப்புக்கான செலவினையும் வருகை தந்ததும்" எவ்வாறு தாமே செலுத்துவர் என்பதைக் குறிப்பிட்டிருந்தது சுவாரசியமானதாக அமைந்திருந்தது."[42] தொற்றுத்தடைகாப்பு நிலையங்கள் இலவசமானவை என மக்களுக்கு ஆரம்பத்தில் உத்தரவாதம் வழங்கப்பட்டிருந்தது. "தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களிடம் இருந்து கட்டணமொன்று அறவிடப்படும்" என்ற குற்றச்சாட்டினை லெப்டினன்ட் ஜெனரல்

சவேந்திர சில்வா மார்ச் மாத நடுப்பகுதியில் மறுத்திருந்தார்.[43] நிலையங்களில் உள்ளவர்களிடம் இருந்து கட்டணம் அறவிடப்படாது என்பதை வலியுறுத்திச் சுகாதார அமைச்சும் ஒரு கூற்றினை வெளியிட்டிருந்தது.[44] ஆயினும், ஏறத்தாழ அதே காலப்பகுதியில், ஹோட்டல்களைச் சொந்தமாகக் கொண்டிருந்த கம்பனிகளால் தொற்றுத்தடைகாப்பு நிலையங்களாக ஹோட்டல்கள் 'வழங்கப்பட்டன'.[45] ஹோட்டல்களில் தொற்றுத்தடைகாப்பினைக் கழிப்பதற்கு இயலுமானவர்களுக்கு அரசாங்கம் திரும்பிவருதலை வசதிப்படுத்தியமையினையும் காணக்கூடியதாக இருந்தது. சிறிலங்கன் விமானசேவையின் உதவியுடன் திரும்பிவருதல் வசதிப்படுத்தப்பட்டது. திரும்பிவருதலுக்கு ஏப்ரல் மாதத்தில் அறவிடப்பட்ட அதிகூடிய பயணக் கட்டணத்தினை நியாயப்படுத்திய விமானசேவை, "விசேட விமானத்தினை இயக்குவது அதீத செலவுமிக்கது எனவும் ஒரு வழிப் பயணத்தில் விமானம் பயணிகள் இன்றி வெற்றாகச் செல்லவேண்டியுள்ளமையும் திரும்பிவருகையில் விமானத்தில் அரைவாசியளவுக்கு மட்டுமே பயணிகள் இருக்கின்றமையும் அதற்கான ஒரு காரணம் எனவும் பயணிகள் போக்குவரத்துக்காக மூடப்பட்டுள்ள வெளிநாடுகளில் உள்ள விமானநிலையங்களைத் திறக்கவைப்பதற்கு உயர் கட்டணங்களைச் செலுத்தவேண்டியுள்ளது எனவும் கூறியது."[46]

இலங்கையின் மிகப் பெரும்பான்மையான புலம்பெயர் தொழிலாளர்கள் தொழில்புரியும் மத்திய கிழக்கில் தொழில்களில் பெருந்தொற்று பாரியதொரு தாக்கத்தினை ஏற்படுத்தியது.[47] இதன் காரணமாகப் பல இலங்கையர்கள் எவ்வித நிதிகளும் இன்றி வேலையிழந்ததுடன் நாட்டுக்குத் திரும்புவதற்கும் அரசாங்கத்தின் உதவியை நாடிநின்றனர். வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்காக அரசாங்கம் உருவாக்கிய ஒன்லைன் தளத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் பதிவுசெய்தனர். ஏப்ரல் நடுப்பகுதியில் இவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதை வசதிப்படுத்துவதற்காக வெளிநாட்டமைச்சு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து செயற்பட்டது.[48] வெளிநாடுகளில் நட்டாற்றில் விடப்பட்டவர்களின் உடனடித் தேவைகளைக் கவனிப்பதற்காக நலனோம்புகை உதவியும் திட்டங்களில் உள்ளடங்கியிருந்தது. இத்தகைய திட்டங்கள் இருந்தபோதிலும், இலக்குவைக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் கிடைக்காமை பற்றிய செய்திகள் ஊடகங்களில் பெருவாரியாக அறிக்கையிடப்பட்டன. தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் கைவிடப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டி இலங்கையின் இராஜதந்திரப் பணியகங்களுக்கு வெளியே ஆர்ப்பாட்டக்காரர்கள் நேரலையாக தங்களின் வீடியோக்களைப் பதிவிட்டிருந்தனர். எவ்வாறாயினும் இவ்வாறான நிலைமை ஏற்படவில்லை என அரசாங்கம் வலியுறுத்தியது. ஜூன் மாதப் பிற்பகுதியில் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார், “விமானநிலையங்களை மீண்டும் திறப்பதற்கான மிகச் சரியான திகதியினை எம்மால் வழங்க முடியாது ஏனெனில் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்தி உலகின் பல பகுதிகளிலும் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவருவதே அரசாங்கத்தின் முன்னுரிமையாகும்”[49] இருப்பினும், ஜூலை மாதமளவில், வெளிவிவகாரச் செயலாளரான ரவிநாத ஆரியசின்ஹவின் கருத்தின் பிரகாரம், “2020 ஜூன் 16 ஆம் திகதியின்போது உள்ளவாறாக, 117 நாடுகளில் வசிக்கும் 52,410 இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரவேண்டியுள்ளது. நாட்டுக்குத் திரும்புவதற்காகக் காத்திருப்பவர்களில் மாணவர்கள் 2,590 பேர் உள்ளனர் (4.9 %), குறுகியகால விசாவில் உள்ளவர்கள் 5,825 பேர் உள்ளனர் (11.12%). அதேவேளை, எஞ்சிய 39,001 பேரும் புலம்பெயர் தொழிலாளர்களாவர்(74.43%). இவர்களுள் 26,321 (50.23%) பேர் மத்திய கிழக்கில் பணிபுரிந்தவர்கள்.”[50] இவரின் கருத்தின் பிரகாரம், ஜூன் 25 ஆம் திகதியின்போது உள்ளவாறாக, 2020 பெப்ரவரி 1 ஆம் திகதி செயன்முறை ஆரம்பித்ததில் இருந்து வெளிநாட்டில் இருந்த இலங்கையர்களில் 10,355 பேர் மட்டுமே விமான சேவை மூலம் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இதில் 33 மாணவர்கள் வுஹானில் இருந்து மீட்கப்பட்டு அழைத்துவரப்பட்டுள்ளனர்.[51] யார் யாரை நாட்டுக்கு அழைத்துவருவது என்ற தீர்மானம் அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும் அவர் மேலும் குறிப்பிட்டார்: “வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவருவதை இயலச் செய்வதில் ஜனாதிபதி செயலகத்துடனும் கொவிட்-19 ஜனாதிபதி செயலணியுடனும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு நெருக்கமாகப் பணியாற்றிவருகின்றது. கொவிட்-19 ஜனாதிபதி செயலணியே எந்த விமான சேவைகளை இயக்குவது என்பது பற்றியும் அதற்கான மாதிரிகள் பற்றியும் தீர்மானிக்கின்றது. பயணத்திற்கான பௌதிகவள ஏற்பாடுகளை சிறிலங்கன் விமானசேவை மேற்கொள்கின்றது, தொற்றுத்தடைகாப்புக்குப் பாதுகாப்புப் படையினர் பொறுப்பாக இருக்கின்றனர், அத்துடன் மருத்துவ அதிகாரிகள் மருத்துவப் பரிசோதனைகளையும் வருநேர்நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்கின்றனர்.”

எவ்வாறாயினும், ஜூலை நடுப்பகுதியில், அரசாங்கத்தின் முன்னுரிமைகள் எனக் குறிப்பிடப்பட்டவைகளைத் தாண்டி, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கிழக்காசியாவுக்கான பணிப்பாளர் நாயகம் காண்டீபன் பாலசுப்பிரமணியம் பின்வருமாறு ஊடகங்களிடம் குறிப்பிட்டார், “உள்நாட்டில் கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்குக் குறையும் வரையில் நாங்கள் நாட்டுக்கு அழைத்துவரும் செயன்முறையினைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம்.... தொற்றுத்தடைகாப்பு நிலையங்களின்

இயலளவில் நாம் தாக்கத்தினை ஏற்படுத்த விரும்பவில்லை. உள்நாட்டில் கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டதும் வெளிநாட்டில் இருக்கும் இலங்கையர்களை நாட்டுக்குக் கொண்டுவரும் செயன்முறைகள் மீண்டும் தொடங்கும்." அந்தச் சந்தர்ப்பத்தில் கண்டறியப்பட்ட அதிகூடிய எண்ணிக்கையிலான கொவிட் தொற்றாளர்கள் நாட்டுக்குத் திரும்பி வந்தவர்களுடன் தொடர்புபடுத்தப்பட்டமையினால் இது நியாயப்படுத்தப்பட்டிருக்கலாம். எவ்வாறிருப்பினும், சக இலங்கையர்களை வெளிநாட்டுகளில் பெருந்தொற்றில் கைவிட்டதைப் பார்க்கிலும், தொற்றுத்தடைகாப்பு வசதிகளை விஸ்தரித்து திரும்பி வருபவர்களைத் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்தும் முறைமையினை வலுப்படுத்தியிருந்தால் அது விரும்பத்தக்கதாக இருந்திருக்கும். நாட்டுக்கு அழைத்துவரும் செயன்முறை இடைநிறுத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டாலும் அவ்வாறு அழைத்துவருவதற்காக விமானசேவைகள் நடத்தப்பட்டமை பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தன. உதாரணமாக, ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் பௌத்த துறவிகள், மாணவர்கள் மற்றும் ஏனைய இலங்கையர்கள் உள்ளடங்கிய 87 பேர் விமானத்தில் அழைத்துவரப்பட்டனர்.[52] ஆகஸ்ட் மாதப் பிற்பகுதியில் அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரத்தில் இருந்தும்[53] செப்டெம்பர் மாதத்தில் தொழில்வாய்ப்புகளை இழந்திருந்த இலங்கையர்கள் சீஷெல்சில் இருந்தும் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டதாக அறிக்கையிடப்பட்டது.[54] புதிய கொத்தணிகள் உருவாகிய காரணத்தினால் நாட்டுக்கு அழைத்துவரும் விமானசேவைகள் ஒக்டோபர் மாதத்தில் மீண்டும் மந்த நிலையினை அடைந்தன. அச்சந்தர்ப்பத்தில் நாளாந்தம் 300 முதல் 400 இலங்கையர்கள் நாட்டுக்குத் திரும்பி வருவதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ஊடகங்களிடம் குறிப்பிட்டிருந்தார்.[55] எவ்வாறாயினும், ஒக்டோபர் மாதமளவில், இலங்கைக்கு வருவதற்காகப் பல இலங்கையர்கள் காத்திருந்த அதேவேளை நாட்டில் மரணிக்கும் இலங்கையர்களை விட ஆறு மடங்கு அதிகமாகப் புலம்பெயர் இலங்கையர்கள் மரணித்தனர்.[56]

## சுற்றுலாத்துறையினை மீள ஆரம்பித்தல்

பொதுமுடக்கம் ஜூன் மாதத்தில் தளர்த்தப்பட்டுப் பொதுத்தேர்தலும் நெருங்கிவந்த காரணத்தினால் இயல்புநிலை என்கின்ற ஒரு போலியான உணர்வுக்குள் இலங்கை திடீரென நுழையத் தொடங்கியது. முன்னைய மாத பொதுமுடக்கத்தின்போது, பலர் தொழில்களையும் வியாபாரங்களையும் இழந்த காரணத்தினால் அவர்களின் வாழ்க்கை நிலை முற்றுமுழுவதும் மாறத் தொடங்கியது. இதன் காரணமாக ஏற்பட்ட போராட்டங்கள் முழுமுடக்கத்தினால் தீவிரப்படுத்தப்பட்டன. ஏனெனில் உணவு மற்றும் அத்தியாவசிய சேவைகளின் விநியோக முறைமைகள் பெரும்பாலும் பொருளாதார

ரீதியாகப் பின்தங்கியவர்களை உள்ளடக்கவில்லை. சர்வதேச வருகைகளின் கட்டுப்பாடு சுற்றுலாத் தொழில்துறையில் ஈடுபட்டிருந்த மக்களையும் கம்பனிகளையும் பாதித்தது. குறிப்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளையும் அத்துடன் சுயதொழில் புரியும் சுற்றுலா வழிகாட்டிகள், சாரதிகள், சிறு கடை உரிமையாளர்கள் போன்றோரையும் பாதித்தது. இயல்பாகவே, எல்லைகளை மீளத் திறந்து சுற்றுலாத் தொழில்துறையினை மீள ஆரம்பிப்பதற்கான அழுத்தத்தின் கீழ் அரசாங்கம் காணப்பட்டது.

இலங்கையின் எல்லைகளினுள் வைரசை இல்லாதொழித்து அதன் மூலம் அனைத்து இலங்கையர்களையும் பாதுகாப்பதற்கான தேவையுடன் இந்த அழுத்தங்கள் முரண்பட்டன. எல்லைகளைத் தொடர்ந்தும் மூடிவைத்திருப்பது என்ற விடயத்தில் அரசாங்கம் ஆரம்பத்தில் உறுதியாக இருந்தது. இருப்பினும், ஆகஸ்ட் 1 ஆம் திகதி சுற்றுலாத்துறைக்காக எல்லைகள் திறக்கப்படும் என ஜூன் மாதத்தில் வாக்குறுதி வழங்கப்பட்டது. சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்தத் திகதி பிற்போடப்பட்டமையினைத் தொடராக அறிவித்துவந்தார். எல்லைகளும் வருடத்தின் எஞ்சிய காலப்பகுதி முழுவதும் மூடிய நிலையிலே காணப்பட்டன[57].

எவ்வாறாயினும், மீண்டும் திறப்பது பற்றிய பேச்சுக்கள் தொடர்ந்தும் உயிர்ப்புடனேயே காணப்பட்டன. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அனுமதித்து "நாட்டினுள் அவர்களின் நடமாட்டத்தினைக் கண்காணிக்கும்" ஒரு செயலியை இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை வெளியிட்டது.[58] கொவிட்-19 இற்குப் பின்னர் இயக்கத்தினை மீளத் தொடங்குவதற்காகக் காத்திருந்த நிலையில், அதிகாரசபையில் பதிவுசெய்த அனைத்து நிறுவனங்களுக்கும் 'பாதுகாப்பானதும் இடரற்றதுமான' இயைபுறல் சான்றுப்படுத்தல் முறைமையினையும் அதிகாரசபை அறிமுகப்படுத்தி அதனைத் துரிதப்படுத்தியது.[59] எவ்வாறாயினும், செப்டெம்பர் மாதத்தின் ஆரம்பப் பகுதியளவில், 160 விண்ணப்பங்கள் மாத்திரமே பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதுடன் சான்றுப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கான ஆர்வமும் குறைவடைந்ததைப் போன்று போல் தென்பட்டது.[60] இத்துறையில் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒரு நலனோம்புகைப் பொதி அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், நலனோம்புகை தேவைப்பட்ட பெரும் எண்ணிக்கையானவர்கள் உத்தியோகபூர்வ ரீதியாக அதனைப் பெறத் தகைமையற்றவர்களாக இருந்தனர். சுற்றுலா அதிகாரசபையின் தலைவரான கிமாலி பெர்னான்டோவின் கூற்றுக்கமைவாக, சுற்றுலாத்துறையில் இயங்கிவரும் 25,000 அமைப்புக்கள் முறைசாராதவையாகவும் பதிவுசெய்யப்படாதவையாகவும் உள்ளன.[61] பாதுகாப்புச் சான்றுப்படுத்தலுக்காகப் பெற்றுக்கொண்ட குறைந்த

எண்ணிக்கையிலான விண்ணப்பங்களுக்கும் இதுவே காரணமாக அமைந்தது. இரண்டு வருடங்களுக்கான இலங்கைச் சுற்றுலா உபாயமார்க்கச் செயற்திட்டம் ஆகஸ்ட் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.[62] கொவிட் தொற்றுக்குப் பின்னர் சுற்றுலாப் பயணிகளுக்கு "ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் முதல் வீடுகளில் நடத்தப்படும் விடுதிகள்" வரையான சகல வகையான இடங்களிலும் வழங்கப்படும் தங்குமிட வசதிகள் பற்றிய 90 பக்க வழிகாட்டல் இதில் உள்ளடங்கியிருந்தது.[63] எவ்வாறாயினும், இந்த அனைத்து நடவடிக்கைகளும் அறியப்படாத ஓர் எதிர்காலத் திகதியில் எல்லைகளை மீளத் திறப்பதற்கான எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்பட்டவையாகும். எல்லைகளை மீளத் திறப்பதற்கான தீர்மானத்தினைச் சுகாதார அதிகாரிகளே மேற்கொள்ளவேண்டும் எனப் பெர்னான்டோ தெரிவித்திருந்தார்.[64]

விமானநிலையங்களை மீளத் திறக்கும் திகதி செப்டெம்பர் மாதத்தில் தொடர்ந்தும் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டது. ஆனால், இது தொடர்பில் அதிக எதிர்பார்ப்புக் காணப்பட்டது. அமைச்சர் ரணதுங்க பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார், "விமானநிலையங்களைத் திறப்பதற்கான பரிந்துரைகள் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, சுகாதார அதிகாரிகள் பச்சைக் கொடி காட்டியதும் அமைச்சு அவற்றினை விரைவாகத் திறக்கும்".[65] சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சரான டி. வி. சானக முன்னதாகக் குறிப்பிடுகையில், சுகாதார அமைச்சின் அங்கீகாரம் கிடைத்த 12 மணித்தியாலங்களினுள் சுற்றுலாத்துறை மீள ஆரம்பிக்கப்படுவதற்குத் தயார் நிலையில் உள்ளது எனக் கூறியிருந்தார். அதேவேளை, தெரிவுசெய்யப்பட்ட நாடுகளுக்குச் சுற்றுலா பபிளை அறிமுகப்படுத்தும் சாத்தியம் பற்றி அரசாங்கம் ஒக்டோபர் மாதத்தில், முதற் தடவையாக ஆலோசித்து வந்தது.[66] எவ்வாறாயினும், கொவிட் தொற்றுநோயை இல்லாமல் செய்வதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டியதன் காரணமாக இந்த ஆலோசனை அங்கீகரிக்கப்படவில்லை. அமைச்சர் ரணதுங்க குறிப்பிடுகையில், "ஐரோப்பா, தூரகிழக்கு ஆசியா மற்றும் ரஷ்யா ஆகிய இடங்களில் இருந்து குழுப் பயணிகளைக் கொண்டுவரும் சாத்தியம் பற்றி நாம் கொவிட்-19 தேசிய செயலணிக் கூட்டங்களிலும் கலந்துரையாடினோம். ஆனால் கொவிட்-19 பெருந்தொற்றுக் காரணமாக எந்த வெளிநாட்டவரையும் நாட்டிற்குள் அனுமதிப்பதற்கான அங்கீகாரத்தினை அவர்கள் வழங்கவில்லை."[67] எவ்வாறாயினும், எல்லைகள் மீளத் திறக்கப்பட்டாலும் கூட சுற்றுலாத்துறையினை மீள ஆரம்பிப்பதை விட இலங்கையர்களை வெளிநாடுகளில் இருந்து இங்கு அழைத்துவருவதை வசதிப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படுவதற்கான சகல அறிகுறிகளுமே தென்பட்டன.[68]

எவ்வாறாயினும், ஒக்டோபர் மாதத்தின் நடுப்பகுதியில், விடயங்கள் மோசமான நிலையை அடைந்தன. இலங்கையின் மிகப் பெரிய ஆடைத் தயாரிப்பு நிறுவனமான பிரண்டிக்சின் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு  தொற்றுக் கொத்தணி உருவாகிய காரணத்தினால் அத்தொழிற்சாலை மீது கவனம் குவிய ஆரம்பித்தது. அந்நிறுவனத்தின் தொழிற்சாலைகளில் ஒன்றில் கொவிட்-19 இற்கு எதிராகப் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்குத் தவறியமையே தொற்றுக் கொத்தணி உருவாகக் காரணம் எனக் கூறப்பட்டது. 1,500 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் நாடு முழுவதும் தொற்றுப் பற்றிய எச்சரிக்கையுணர்வு பரவி மீண்டும் பகுதியளவில் பொதுமுடக்கம் அமுலானது.[69] தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையினால் இலங்கையின் எல்லைகளைப் முழுமையாகத் திறக்கும் சாத்தியம் மேலும் பிற்போடப்பட்டது.

நவம்பர் மாதத்தின் ஆரம்பத்தில், சுற்றுலாத்துறை அமைச்சு சுற்றுலா ஆலோசனைக் குழு ஒன்றினை அமைத்தது. முன்னணி ஹோட்டல் உரிமையாளர்கள் சிலர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு ஜெட்விங் சிம்போனியின் தலைவரான ஹிரான் குரே குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். "ஆரம்பத்தில் ஒரு பயண பபிள்(travel bubble) மூலமாக அல்லது பயண கொரிடோர்(travel corridor) மூலமாக பயணத்திற்காக நாட்டினை மீண்டும் திறப்பதற்காகவும் அத்துடன் குறுகிய காலத்திற்கு, சுற்றுலாத்துறையினைச் சார்ந்துள்ளவர்களுக்கு மாற்று வாழ்வாதார வழிகளைக் கண்டுபிடிப்பதற்காகவும் ஒரு சட்டகத்தினையும் ....... முன்மொழிவினையும் வரைவதற்கான பொறுப்பு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது."[70] "வருமான உதவி இல்லாமையினால் அதிகமானவர்கள் கொடுப்பனவுகளைச் செலுத்த முடியாதிருக்கும் காரணத்தினால் திரளும் வட்டியின் காரணமாகப் பங்கீடுபாட்டாளர்கள் தற்போது முகங்கொடுத்துவரும் நிதி நெருக்கடிகளைக் கூட்டத்தில் கோடிட்டுக்காட்டிய குரே, ஏதோ ஒரு வடிவில் அரசாங்கத்தின் உதவிக்கான தேவை இருப்பதைக் குறிப்பிட்டார்"[71]

டிசம்பர் மாதத்தில், சுகாதார அமைச்சின் கொவிட்-19 மருத்துவ சிகிச்சை முகாமைத்துவ நிபுணர் குழுவின் உள்ளீடுகளுடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் சர்வதேச சுற்றுலாத்துறையை மீள ஆரம்பிப்பதற்கான "அனைத்தையும் உள்ளடக்கிய வழிகாட்டல்கள்" இறுதியாக்கப்பட்டு அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டன. சர்வதேச பயணிகளுக்காக 2021, ஜனவரி 1 ஆம் திகதியில் இருந்து விமானநிலையங்களைத் திறக்குமாறு அதிகாரசபையின் தலைவரான கிமாலி பெர்னான்டோ பரிந்துரைத்தார். வருகை தந்ததன் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டங்களில் பல கட்டுப்பாடுகளை விதித்த வழிகாட்டல்கள்,

பாதுகாப்புச் சான்றுப்படுத்தல்களைக் கொண்ட ஹோட்டல்களில் மாத்திரமே தங்குமிட வசதி வழங்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தன.[72] அதேவேளை, தடுப்பூசி ஏற்றியுள்ள சுற்றுலாப் பயணிகளுக்காக மீளத் திறப்பதனை இலங்கை பரிசீலிக்க வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்ற ஆலோசனைக் குழுவொன்றிடம் தெரிவித்திருந்தார்.[73] எவ்வாறாயினும், இந்தக் கட்டத்தில் கூட, மீளத் திறப்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டது மாத்திரமேயன்றி உறுதியான தீர்மானம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. ஆனால், கிறிஸ்மஸ் காலப்பகுதியில், உக்ரேனியன் சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட முதலாவது விசேட விமானம், விசேட பாதுகாப்பு வழிகாட்டல்களின் கீழும் புறப்படுதலுக்கு முன்னரான பிசிஆர் பரிசோதனையுடனும் டிசம்பர் 28 ஆம் திகதி வந்தடையவுள்ளது எனத் திடீரென அறிவிக்கப்பட்டது.[74] ஒவ்வொரு விமானமும் 215 உக்ரேனியன் சுற்றுலாப் பயணிகளைக் கொண்டிருக்கும் வகையில் டிசம்பர் 28 ஆம் திகதிக்கும் ஜனவரி 24 ஆம் திகதிக்கும் இடையில் 12 விமானங்கள் வருகை தரும் என்றே ஆரம்பத் திட்டத்தில் எதிர்வுகூறப்பட்டிருந்தது. இக்கருத்திட்டத்தினை முன்னெடுத்தவர் ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரான உதயங்க வீரதுங்க எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, பொருளாதார மீளெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் இத்திட்டத்திற்குப் பூரண ஆதரவு தெரிவித்துள்ளனர் எனவும் அறிக்கையிடப்பட்டிருந்தது.[75] பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற உத்தரவாதத்தினைத் தாண்டி, இவர்கள் வருகை தந்த சில நாட்களிலேயே சில உக்ரேனியர்களின் மத்தியில் கொவிட்-19 தொற்று ஏற்பட்டது.[76] விரைவில், உக்ரேனியப் பயணிகள் குழு தனது முகவராண்மையின் மேற்பார்வையினைத் தாண்டி பயணம் செய்கின்றது என்பதை அறிவித்து இலங்கை சுற்றுலா அதிகாரசபையின் தலைவர் கிமாலி பெர்னான்டோ ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதினார்.[77] எனவே, கவனமாக மேற்கொள்ளப்பட்ட திட்டமிடலையும் பல மாதக் காத்திருப்பையும் தாண்டி, இறுதியாகச் சுற்றுலாத்துறைக்காக எல்லைகள் திறக்கப்பட்ட போது, அது அச்சமும் குழப்பமும் சூழ்ந்ததாகவே காணப்பட்டது. எனவே, புதுவருடப் பிறப்பின்போது, அது தீய நிகழ்வுகளுக்கான சாத்தியங்களுடன் வந்ததாகவே பலரும் உணர்ந்தனர்.

## முடிவு

நடந்தவை அனைத்தையும் ஒரு பட்சிப் பார்வையில் நோக்கினால், கொவிட்-19 பெருந்தொற்றின் போது, குறிப்பாக அதன் ஆரம்பக்

கட்டத்தின்போது, எல்லைக் கொள்கையினை இலங்கை கையாண்ட விதம் செயற்திறன்மிக்கதாக இருந்தது போலவே தென்படுகின்றது. எவ்வாறாயினும், பெருந்தொற்றின் முதலாம் வருடத்தின் போது அரசாங்கத்தின் கொள்கை எவ்வாறு மாறியது என்பதை உன்னிப்பாக அவதானிக்கும்போது, அதில் பல தவறிய வாய்ப்புக்களையும் மீறப்பட்ட வாக்குறுதிகளையுமே காண முடிகின்றது. விமானநிலையங்கள் மூடப்படும் என அறிவிக்கப்பட்ட போதிலும் கிட்டத்தட்ட வருடம் முழுவதும் பயணிகளின் வருகை தொடர்ந்தது. தொற்றுத்தடைகாப்பு கட்டாயமானது என அறிவிக்கப்பட்ட போதிலும், இது பலராலும் மீறப்பட்டதுடன் இடைக்கிடை அரசாங்கமே அதனைத் தளர்த்தியமையையும் காணக்கூடியதாகவிருந்தது. இதன் காரணமாக அதிகரித்த கொவிட் தொற்றுக்களின் எண்ணிக்கையே ஒட்டுமொத்தமான அதிகரித்த நோய்ப் பரவலுக்குமான முன்னணிக் காரணமாக மாறியது. தாய்நாட்டுக்கு மக்கள் அழைத்து வரப்படுவார்கள் என வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் இச்செயன்முறையில் சமத்துவமின்மை இழையோடியிருந்தமையினைக் காண முடிந்தது. இச்சமத்துவமின்மையின் காரணமாக, அந்நியச் செலாவணியின் மூலம் வருமானத்தினைப் பெறுவதற்காக இலங்கை மிக நீண்டகாலமாக யாரின் பண அனுப்புகைகளில் தங்கியிருந்ததோ அவ்வாறான பெரும் எண்ணிக்கையிலான வெளிநாடுகளில் வாழ் இலங்கையர்கள் வருட முடிவிலும் கூட வெளிநாடுகளில் அநாதரவாகி நிற்கும் நிலை ஏற்பட்டது. இறுக்கமான பரிசீலிப்புக்களின் பின்னரும் சுகாதார வழிகாட்டல்களின் கடுமையான அமுல்படுத்தலின் பின்னருமே எல்லைகள் திறக்கப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்ட போதிலும் முதற் பயணிகளாக வந்தவர்கள் நோய்க்காவிகளாக இருந்ததோடு மாத்திரமன்றி அதிகாரிகளின் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்டவர்களாகக் காணப்பட்டனர்.

இலங்கையில் பெருந்தொற்று ஏற்பட்டதில் இருந்து, வைரசினால் ஆயிரக்கணக்கானவர்களின் உயிர் காவுகொள்ளப்பட்டுள்ளது. மேலும் பலரின் வாழ்வு பொருளாதார விளைவுகளின் காரணமாகத் தலைகீழாக மாற்றப்பட்டுள்ளது. வைரஸ் தொற்றின் அதிகரித்த பரவலுக்கு இட்டுச்சென்ற காரணங்களை மதிப்பிடுவதும், குறிப்பாக, சட்டம், சம்பந்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இயைபுறத் தவறியமையினால் ஏற்பட்ட விளைவுகளாக அவற்றை மதிப்பிடுவதும் எதிர்காலத்தில் இலங்கையில் மிகவும் வகைப்பொறுப்புமிக்க ஆளுகையினைப் போஷிப்பதற்கு அவசியமானதாகும் என்பதுடன் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு (அதன் தவறான முகாமைத்துவத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளடங்கலாக) அவர்களின் இழப்புக்களுக்காகப் பரிகாரம் வழங்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கான அத்தியாவசியமான படியாகவும் அது

காணப்படும். நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலை இலங்கை கொண்டுள்ளது என்பதை அறியும்போது பெருந்தொற்றின் தவறான முகாமைத்துவம் குறிப்பாக அவநம்பிக்கையினையே ஏற்படுத்துகின்றது. தகைமை வாய்ந்த பொதுச் சுகாதாரக் கட்டமைப்பினால் முகாமை செய்யப்பட்ட யானைக்கால் நோய் மற்றும் மலேரியா போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான கடந்த காலப் பிரசாரங்களில் இருந்து இது தெளிவாகின்றது. கொவிட்-19 பெருந்தொற்றுக்கான அரசாங்கத்தின் பதிற்செயற்பாட்டினைப் பகுப்பாய்வு செய்கையில் இலங்கை இந்த நியமங்களை நிறைவேற்றியிருக்கும் என எதிர்பார்ப்பது தவிர்க்க முடியாததாகும். நாட்டின் எல்லைக் கொள்கைகள் மற்றும் பெருந்தொற்று முகாமைத்துவம் பற்றிய இந்தப் பகுப்பாய்வு நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான இலங்கையின் ஆற்றலின் கடந்த காலச் சான்றுகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

# உசாவல்கள்

[1] நெருக்கடிக்குள்ளான சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்திருப்பதால் அரசாங்கம் விமான சேவைகளுக்கு இயங்குவதற்கான நியமங்களை வழங்குகின்றது | Daily FT (2.3.2020)

[2] கொரோனா வைரஸ் பற்றிய மிகுந்த எச்சரிக்கையுடன் இலங்கை | Daily FT (25.1.2020)

[3] BREAKING NEWS : இலங்கையில் கொரோனா வைரசினால் பீடிக்கப்பட்டவர்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது (newsfirst.lk) (27.1.2020)

[4] கொரோனா வைரசுக்கு எதிராக அரசாங்கம் பல்முனைப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளது | Daily FT (29.1.2020)

[5] கொரோனா வைரசுக்கு எதிராக அரசாங்கம் பல்முனைப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளது | Daily FT (29.1.2020)

[6] கொரோனா வைரசுக்கு எதிராக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் போராடுகின்றது | Daily FT (1.2.2020)

[7] பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் இன்று முதல் பயணிகளுக்காகத் திறக்கப்படுகின்றது | Daily FT (6.3.2020)

[8] News 1st: Prime Time Sinhala News - 7 PM | (13-03-2020) - YouTube (13.3.2020)

[9] மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்திருப்பதால் கொவிட்-19 தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரப்படுத்தியுள்ளது | Daily FT (13.3.2020)

[10] நோயாளர்களின் எண்ணிக்கை 5 ஆகியிருப்பதால் அரசாங்கம் கொவிட்-19 இற்கு எதிரான போராட்டத்தினைத் தீவிரப்படுத்தியுள்ளது | Daily FT (14.3.2020)

[11] நோயாளர்களின் எண்ணிக்கை 5 ஆகியிருப்பதால் அரசாங்கம் கொவிட்-19 இற்கு எதிரான போராட்டத்தினைத் தீவிரப்படுத்தியுள்ளது | Daily FT (14.3.2020)

[12] பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மூடப்படாது, AASL பிரதானி கூறுகின்றார் | Daily FT (17.3.2020)

[13] பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மூடப்படாது, AASL பிரதானி கூறுகின்றார் | Daily FT (17.3.2020)

[14] News 1st: Prime Time Sinhala News - 7 PM | (17-03-2020) - YouTube (timestamp: 5:33)

[15] பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மூடப்படாது, AASL பிரதானி கூறுகின்றார் | Daily FT (17.3.2020)

[16] மார்ச் 31 வரை இலங்கை சகல நாடுகளின் பயணிகளுக்காகவும் மூடப்பட்டுள்ளது | Daily FT (25.3.2020)

[17] அந்தந்த நாடுகளிலேயே இருக்குமாறு அரசாங்கம் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை வேண்டுகின்றது | Daily FT (27.3.2020)

[18] அந்தந்த நாடுகளிலேயே இருக்குமாறு அரசாங்கம் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை வேண்டுகின்றது (27.3.2020)

[19] உள்வரும் பயணிகள் விமானங்கள் மீதான தடையினை பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் ஏப்ரல் 7 வரை நீட்டித்துள்ளது | Daily FT (28.3.2020)

[20] அனைத்து வகையான விசாக்களின் இடைநிறுத்தத்தினையும் இலங்கை நீட்டித்துள்ளது | Daily FT (29.3.2020)

[21] கொரோனா வைரஸ் தொடர்பாக இலங்கை அவதானமாக உள்ளது | Daily FT (25.1.2020)

[22] கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து சீனாவில் இருந்து 21 இலங்கை மாணவர்கள் இலங்கை திரும்பியுள்ளனர் | Daily FT (28.1.2020)

[23] கொரோனா வைரசுக்கு எதிராக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் போராடுகின்றது | Daily FT (1.2.2020)

[24] பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் அரசாங்கம் பிசிஆர் பரிசோதனைகளை ஆரம்பித்துள்ளது| Daily FT (2.6.2020)

[25] கொவிட் – 19 சிகிச்சை வசதிகளை அரசாங்கம் மேலும் விரிவுபடுத்தியுள்ளது| Daily FT (20.3.2020)

[26] News 1st: Prime Time Sinhala News - 7 PM | (17-03-2020) - YouTube (timestamp: 5:00)

[27] தொற்றுத்தடைகாப்பு நிலையமாக ஹெந்தளை தொழுநோய் வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது | Daily FT (5.3.2020)

[28] இன்று முதல் கொவிட்-19 தொற்றுத்தடைகாப்புக்கான புதிய நடவடிக்கைகள் | Daily FT (10.3.2020)

[29] விமர்சனங்களுக்கு மத்தியில் கொவிட்-19 தொற்றுத்தடைகாப்பு நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் அரசாங்கம் | Daily FT (12.3.2020)

[30] மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்திருப்பதால் கொவிட்-19 தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரப்படுத்தியுள்ளது | Daily FT (13.3.2020)

[31] நோயாளர்களின் எண்ணிக்கை 5 ஆகியிருப்பதால் அரசாங்கம் கொவிட்-19 இற்கு எதிரான போராட்டத்தினைத் தீவிரப்படுத்தியுள்ளது | Daily FT (14.3.2020)

[32] நிவாரண நடவடிக்கைகளை ஜனாதிபதி தொடக்கி வைத்தார், கொவிட்-19 இற்கு எதிரான போராட்டத்தில் ஒற்றுமைக்கான வேண்டுகோள் | Daily FT (18.3.2020)

[33] மேலும் ஒருவர் கொவிட்-19 இனால் இறப்பு, மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 189 | Daily FT (9.4.2020)

[34] 865 கொவிட்-19 நோயாளர்கள் என நோயாளர்களில் புதிய அதிகரிப்பு | Daily FT (24.10.2020)

[35] வுஹானுக்கான கருணைப் பணிப் பயணத்தினை நினைவுகூரும் சிறிலங்கன் விமானசேவைச் சிப்பந்திகள் | Daily FT (4.2.2020)

[36] News 1st: Prime Time Sinhala News - 7 PM | (17-03-2020) - YouTube (timestamp: 5:33)

[37] அந்தந்த நாடுகளிலேயே இருக்குமாறு அரசாங்கம் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை வேண்டுகின்றது | Daily FT (27.3.2020); புலம்பெயர் இலங்கையர்களுக்கு அரசாங்கத்தின் விசேட வேண்டுகோள் – ஜனாதிபதி ஊடகப் பிரிவு (pmdnews.lk) (27.3.2020)

[38] இந்தியாவில் இருந்து வரமுடியாது நிர்க்கதியாகியிருந்த சகல பௌத்த யாத்திரிகர்களும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் | Daily FT (22.3.2020)

[39] பொதுமுடக்கத்தின் மத்தியில் தென்னிந்தியாவிலுள்ள இலங்கை மாணவர்களைக் கண்டறியும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | Daily FT (27.3.2020)

[40] நேபாளத்திலுள்ள இலங்கைத் தூதரகம் இலங்கையர்களுக்கு கொவிட்-19 கட்டுப்பாடுகள் தொடர்பில் உதவிக்கான உத்தரவாதத்தினை வழங்கியது| Daily FT (30.3.2020)

[41] தம்மை உடனடியாக இடரில் இருந்து மீட்குமாறு பங்களாதேசில் உள்ள இலங்கையர்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் | Daily FT (12.4.2020)

[42] தம்மை உடனடியாக இடரில் இருந்து மீட்குமாறு பங்களாதேசில் உள்ள இலங்கையர்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் Daily FT | Daily FT (12.4.2020)

[43] தென்கொரியாவில் இருந்து வந்த பயணிகளில் முதலாவது தொகுதியினர் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்தப்பட்டனர் | Daily FT (11.3.2020)

[44] தென்கொரியாவில் இருந்து வந்த பயணிகளில் முதலாவது தொகுதியினர் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்தப்பட்டனர் | Daily FT (11.3.2020)

[45] தொற்றுத்தடைகாப்பு நிலையமாகப் பயன்படுத்த 150 அறைகொண்ட தனது வஸ்கடுவ ஹோட்டலை சிட்ரஸ் வழங்குகின்றது | Daily FT (21.3.2020); தொற்றுத்தடைகாப்பு நிலையமாகப் பயன்படுத்த கிளப் டொல்பின் ஹோட்டலை ஹேமாஸ் வழங்குகின்றது | Daily FT (21.3.2020); தொற்றுத்தடைகாப்பு நிலையமாகப் பயன்படுத்த Trinco Bluவினை JKH வழங்குகின்றது | Daily FT (21.3.2020)

46 கொரோனா வைரஸ் மீட்பு விமானங்களுக்கு ஏற்படும் உயர் செலவுக்கான காரணத்தினைச் சிறிலங்கன் விமானசேவை விளக்குகின்றது | EconomyNext (26.4.2020)

47 'நான் மாட்டிக்கொண்டுள்ளேன்': கொவிட்-19 ஏற்படுத்திய தொழில் இழப்புக்களினால் நிர்க்கதியாக்கப்பட்டுள்ள ஐக்கிய அரபு இராச்சியப் புலம்பெயர் தொழிலாளர்கள் | கொரோனாவைரஸ் | த கார்டியன் (20.4.2020)

48 மத்திய கிழக்கில் உள்ள புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உதவுவதற்காக வெளிநாட்டமைச்சும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் இணைகின்றன | Daily FT (16.4.2020)

49 விமானநிலைய மீள்திறப்பு ஆகஸ்ட் நடுப்பகுதி வரை தள்ளிப்போடப்பட்டுள்ளது: பிரசன்ன | Daily FT (30.6.2020)

50 இலங்கையின் பொருளாதார மீளலில் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் வகிபாத்திரம்: சவால்களும் வாய்ப்புக்களும் | Daily FT (8.7.2020)

51 இலங்கையின் பொருளாதார மீளலில் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் வகிபாத்திரம்: சவால்களும் வாய்ப்புக்களும் | Daily FT (8.7.2020)

52 Daily Mirror - Sri Lanka Latest Breaking News and Headlines - Print Edition இலங்கையர்களின் இரண்டாவது குழு தாய்லாந்தில் இருந்து நாட்டிற்கு அழைத்துவரப்பட்டனர் (22.8.2020)

53 அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரிலுள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்துவருவதற்கான விசேட விமானசேவை - Adaderana Biz English | Sri Lanka Business News (26.8.2020)

54 இலங்கை: நிர்க்கதியாகியுள்ள மேலும் 472 இலங்கையர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர் (colombopage.com) (11.9.2020)

55 கொவிட்-19 தொற்றுத்தடைகாப்புக் காரணமாக நாட்டிற்குப் பயணிகளை அழைத்துவரும் விமானங்களை விமானநிலையத்தில் இலங்கை தாமதப்படுத்துகின்றது | EconomyNext (11.10.2020)

56 திரும்பி வருவதற்கான புலம்பெயர் தொழிலாளர்களின் வாய்ப்புக்களை அச்சுறுத்தும் மினுவங்கொட கொவிட்-19 தொற்றாளர்கள் | Daily FT (12.10.20200

57 விமானநிலைய மீள்திறப்பு ஆகஸ்ட் நடுப்பகுதி வரை தள்ளிப்போடப்பட்டுள்ளது: பிரசன்ன | Daily FT | Daily FT (30.6.2020); பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மீள்திறப்பு செப்டெம்பர் மாதத்திற்குத் தள்ளிவைப்பு| Daily FT (21.7.2020); விமானநிலையங்கள் ஏப்ரலுக்கு முன்பு திறக்கப்படும்- Official | Daily News (16.9.2020); இலங்கை : கொவிட்-19 நூறு சதவிகிதம் கட்டுப்படுத்தப்படும் வரையில் இலங்கை விமானநிலையங்கள் திறக்கப்படமாட்டாது – சுற்றுலாத்துறை அமைச்சர் (colombopage.com) (17.9.2020)

58 அனைத்தையும் உள்ளடக்கிய இலங்கை சுற்றுலாத்துறைச் செயலி தற்போது தயார் | Daily FT (11.8.2020)

59 'பாதுகாப்பும் இடரற்றதுமான' சுற்றுலாப் பயணிகளுக்கான ஹோட்டல் இயைபுறல் சான்றிதழை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை விநியோகிப்பதைத் துரிதப்படுத்தி வருகின்றது | Daily FT (11.8.2020)

60 'பாதுகாப்பும் இடரற்றதுமான' கொவிட்-19 சான்றுப்படுத்தல் தொடர்பாகச் சுற்றுலாத் தொழிற்துறையில் இருந்து பலவிதமான பதிற்செயற்பாடுகள் | Daily FT (7.9.2020)

61 SPOTLIGHT with Larry | கிமாலி பெர்னான்டோ - YouTube (29.6.2020)

62 Sri Lanka Tourism Strategic Action Plan 2020-2022 to reform industry | Daily FT (26.8.2020)

63 SPOTLIGHT with Larry | கிமாலி பெர்னான்டோ - YouTube (29.6.2020)

64 SPOTLIGHT with Larry | கிமாலி பெர்னான்டோ - YouTube (29.6.2020)

65 இலங்கை: கொவிட்-19 நூறு சதவிகிதம் கட்டுப்படுத்தப்படும் வரையில் இலங்கை விமானநிலையங்கள் திறக்கப்படமாட்டாது – சுற்றுலாத்துறை அமைச்சர் (colombopage.com) (17.9.2020); மேலும் பார்க்க, பச்சைக்கொடி காட்டப்பட்டதும்

விமானநிலையங்கள் 12 மணித்தியாலங்களினுள் திறக்கப்படும்: இராஜாங்க அமைச்சர் டி. வி. சானக (newsfirst.lk) (6.9.2020)

66 சிறு சுற்றுலாக் குழுக்களைக் கொண்டுவருவதற்கான முன்மொழிவு இன்னும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது: சுற்றுலாத்துறை அமைச்சர் | Daily FT (27.10.2020)

67 சிறு சுற்றுலாக் குழுக்களைக் கொண்டுவருவதற்கான முன்மொழிவு இன்னும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது: சுற்றுலாத்துறை அமைச்சர் | Daily FTP | Daily FT (27.10.2020)

68 பச்சைக்கொடி காட்டப்பட்டதும் விமானநிலையங்கள் 12 மணித்தியாலங்களினுள் திறக்கப்படும்: இராஜாங்க அமைச்சர் டி. வி. சானக (newsfirst.lk) (6.9.2020)

69 மினுவாங்கொட கொத்தணியில் கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை 1500 னைத் தொட்டுள்ளது (newsfirst.lk) (13.10.2020)

70 11 பேர் கொண்ட ஆலோசனைக் குழுவினைச் சுற்றுலாத்துறை அமைச்சர் நியமித்துள்ளார் | Daily FT (4.11.2020)

71 11 பேர் கொண்ட ஆலோசனைக் குழுவினைச் சுற்றுலாத்துறை அமைச்சர் நியமித்துள்ளார் | Daily FT (4.11.2020)

72 சுற்றுலாப்பயணிகளை ஜனவரி 1 இல் இருந்து வரவேற்பதற்கான புதிய வழிகாட்டல்கள் விரைவில் | Daily FT (1.12.2020)

73 பிரசைகளுக்குத் தடுப்பூசியேற்றும் நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை இலங்கை வரவேற்கவுள்ளது | EconomyNext (4.12.2020)

74 டிசம்பர் 28 இல் இருந்து கொவிட்-19 விதிகளின் கீழ் இலங்கை சுற்றுலாத்துறையினை மீள ஆரம்பிக்கின்றது | EconomyNext (25.12.2020)

75 Eureka! கொவிட் தொற்றுக்குப் பின்னரான முதல் தொகுதி சுற்றுலாப் பயணிகள் இன்று உக்ரைனில் இருந்து வருகை | Daily FT (28.12.2020)

76 இலங்கையின் சுற்றுலாத்துறை மீட்புக் கருத்திட்டத்தில் மூன்று உக்ரைன் சுற்றுலாப் பயணிகளுக்கு கொவிட்-19 தொற்று | EconomyNext (30.12.2020)

77 தான் அறியாத விதத்தில் உக்ரேனியர்கள் மிரிஸ்ஸ, யாலவிற்குச் சென்றமை தொடர்பாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் அதிர்ச்சியடைந்துள்ளார் | Daily FT (4.1.2021)